உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி ௨௫] அக்ஷய ௵ மார்கழி ௴ [பகுதி ௨.

Vol. XXV. December-January-1926-27. No. 2.

## அழகு.

ஐம்பொறிநுகர்வுக்கிலக்காய்ப் புலனுணர்வைப் புனிதமொடினிமைப்படுத்துவதனைத்தும் அழகேயாம். 'கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறியும்' ஐம்புலன் சுவைக்கு மழகனைத்தும் பண்பாமேனும், பண்பிகளைப்பற்றியன்றிப் பொறிநுகரு மழகொன்றில்லை. அழகோவியம் அழகியபண் அழகுணா அழகிய மணம் அழகூறு இவை பலசுவை நலச்செவ்வி யெவ்வொன்றும் ஓவியம் வீணை தேன் மலர் மெல்லிய லனையதோர் குணிகொண்டன்றி உணரொணாது. ஒளி அல்லது காட்சிப்பொருள், ஓசை அல்லது இசைப்பொருள், சுவை அல்லது துய்க்கும்பொருள், நாற்றம் அல்லது மோப்பப்பொருள், உறுதல் அல்லது பரிசப்பொருள் என்பவற்றுள் யாதேனுமொன்றை நிலைக்களனாகப் பெறுவிடத்து அழகெதுவும் புலன்புகுந்தினிப நலந்தாற்கில்லை.

உண்மையிற் பண்புகளின் பலதிறப்பட்ட கூட்டமே பல்வேறு பொருளாகப் பரிணமிப்பதல்லால், அவற்றின்புறம்பே பண்புகளைப் பகுத்துநீத்த தனிநிலையிற் பொருளொன் றென் றெய்து மில்லை. தொன்மை, நெடுமை, வன்மை, பருமை, கன்மை யன்ன பண்மைத் தன்மைகளின் யாப்புறவாம் பான்மையேயாயதோர் மலைப்பொருளும்,

அப்பண்புகளை யொவ்வொன்றாய்க் கருத்தளவிற் பிரித்து நீப்பின், நிலைப் பொருளன்றி இலைப்பொருளென்று நீங்கக் காண்பாம். அவ்வாறே அறிவுக்கிலக்காம் அகிலஉலகப்பொருளனைத்தும் அறிதற்குரிய குணத் திரட்டாகக் காண்பாம். தானுமோர் பண்பாமேனும் அழகு பெரும் பாலும் வேறு பண்புகளின் சேர்க்கையாற் புலன்கவர்ந்தினிப்பிக்கும் பான்மையின் பரியாயமாம்.

இனி, புலன்புகுநலமெலாம் பொற்பெனல் பொருந்துமேனும், கட் புலன் கதுவும் கவினை அழகெனலே ஒட்பமுடையா ரொப்புரவாகும். அழகே கண்பருகுங் கள்ளும் காட்சிப்புலனை மாட்சிப்படுத்தும் அமுதமு மாம். பொறிப்புழை புகுந்து புலன்கள் அறைபோக்கி அறிவடிமை கொள்ளு மழகு விடநறவாம். விழிவழி நுழைந்து, விழுமமொடு தூய்மைதழுவி யுயரின்பத்தா லவசமாக்கும் அழகு நிலையிறவா அமுத நலமீயும். இயற்கைப்பேரெழிலனைத்தும் இனைத்தேயாம். பொறித் துணைகூட்டி, விழைவூட்டி, உணர்வாட்டும் ஒப்பனைச் செய்கவினே பெரும்பாலும் ஊன்கவரும் அரவாகும்.

புறத்திருளோ டகத்தலைக்கு மனைத்திருட்டு மறவோட்டி, மாசற் றார்மனம்போல மலரினங்கள் பொதியவிழ்ந்து மணமுகுப்ப, சோலைதொ றும் மழலையொடு புள்வெள்ள மிசைமிழற்ற, அறவோர்செவ்வுள்ளமென அடிவானத் தழற்கதிர்க ளெழிலுமிய அருளுருவாயெழும் இரவியிளங் குழவியழகைக் காண்பாம். தொல்லுலகின் தொன்மைத்தாய், இற வாத பனிதவழு நெடுமுடியில் உடுக்கணங்கள் அரதனமா யொளிரநின்று, நந்தாத நலந்தருபொன் சிந்துமுதற் பெருவளமார்கங்கையொடு *பிரமை யெனும் யாறுகளால் உலகூட்டிப் பருவமெதும் நாடெதுவும் தரு வளப்பும் வளமனைத்தும் தன்னகத்தே மன்னத்தாங்கிப் பாதமகள் அற வாழ்வை வடகலையில் நின்றோம்பும் மலையரசின் உலையா நல் லழகு காண் பாம். உலையாத அகல்வானின் தொல்லுறவு சொல்லுதல்போல் ஓவாத

*பிரமை - பிரமபுத்திராநதி,

பசுமீல நீர்மை போக்கு, அலேயாத அறத்துறுதி யயராமல் அலேமுரசால் அனவரத மனேவரையும் அறிவுணர்த்தி, வியனுலகூட்டும் புயலின மருத்தும் பெருமைத்தாயினும்—தம்மைப்பேணும் அம்மையே தம் மகார் மிச்சிலேயும் நச்சுதல்போல்—முகிலுமிழ் மழைநீர் மூவழிமடுத்து 'உலகுயிரனைத்தும் நிலவுகென்' றென்றும் நிலம்புடை சூழ்ந்துநின்று வாழிபாடும் ஆழியினழகு காண்பாம். இன்னும் எல்லிவீழ அல்லிமுனெழுந்து, எல்லேயில் தொல்லரும் பிறப்புணர்த்தி, "நல்லனயாவையும் ஒளியவாம், அல்லன இருளிடை மூளேத்தவ் விருளொடு கழியும், அறந் தலேப்படுபவ ருளந்தளிர்த்திடுமா றமிழ்தளித்திடுவன், வம்மின் நீர் வம்மின்" என்று தன் தண்கதிரிசைப்ப, வான்கொலு அரசுலாவருந் திருவனப்பார் முழுவெண் டிங்களின் அழகுநாங் காண்பாம். இன்னும் பகலவன்மாட்சிப் பாயிரங்கூற அகவிதழ்ச்சாக்ஷி யாயிரந் தேறு செந்தாமரையும், மணத்தூதனுப்பி வரும் வண்டர்தமை இருளிடை மருளாது கண்டு வழிக்கொளத் தமது தூய வள்ளிதழ்க்கரம் விரித்துபசரித் தப்பாணர்தம் இன்னிசைவேட்டுக் கேட் டவர்க்கு யாணர்த்தீந் தேன் உவந்தருத்தி, விருந்தறம் யாண்டும் புரிந்து துறை மாண்ட நீராம் பன்மலர்நிரையும் இயற்கையினலத்தைப் பபக்குமுறை தேர்வாம். இவையெலாம் காண் பொறியுணர்வும் கண்டோருள்ளமும் மாண்பொடு மகிழ்வால் மலர்ந்து அவர் சால்பை வளம்பட வளர்க்குமல்லால், எனேத்திறையும் கயமையின்கயப்பு நல்கா.

இனி, கவித்துறையும் உலகியலும் காரிகையார் முகமதியைக் கவின மருங் கற்பமாக்கொள்ளக் காண்பாம். ஈண்டும் கண்டார்க் கிறுக்குகள்ளனேய காவுள்ளக் கபடுவளர் செவிலிமுகக் கவினும் உண்டு: மபக்கற்ற பெருமித வானுவகை மனத்தூட்டி பொரு மறுவற்ற முழுமதிபோல் மலர் வதன வனப்பும் உண்டு. வரிமென்தோல் வனப்புடை மாவேங்கையெனத் தாவிமோதித் தரியலர்போலெதிர்பவர்கண் தாக்கி அவர் உணர்வுண்டு செம்மாக்கும் முகத்தெழிலே தாக்கணங்காம். இஃது, உடை

யவரிளமையில் முதிர்ந்து, பெட்பவருளம் பேதுறுத்து, நிலையாது விரைவிலுலையும்நீர்மைத்தாம்: வான்மீகர் கவிதையி னழகும், வனத்திருவர்முன்வந்த வஞ்சச்சூர்ப்பநகை வனப்பும் இவ்வரைப்பாம். காமங்கதுவாத், கண்டோருளமுவந்து புனித வான் பெருமிதப் புளகம் பூப்ப வயதொடு வளரும் வளமுடைத் தெய்வவனப்பு அமிழ்தின்நீர்த்து: கண்ணகி கவினும், காயுமனத் திலக்குவனைத் தாயரை நினைக்கவைத்த கம்பர்தம் தாரையழகும் இனைத்தாகும்.

இனி, அழகனைத்தும் உவகையொன்றே யுதவுமென்றல் உண்மை யன்று. முற்றத்திருந்திய குற்றமில்லெழில் எதுவும்,—

“நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்
றப்பா லெட்டாம் மெய்ப்பா”ட்டினுக்கும்

முதலுந் துணையும் முடிவுமாகும்.

நிறையும் நலனும் நீர்மையும் நிற்குந்
துறையும் போதும் துய்ப்பவ ருளமும்
முறையே தத்தம் முனைப்பா லவ்வம்
மெய்ப்பா டதனை மேவுறு விக்கும்.

கண்டாரப் பிணிக்குந் தகையவாய்க் காணார்க்குங்
காதல் வளர்க்குங் கவின்.

ச. சோ. பாரதி.

---

# இளமையும் முதுமையும்.

(இது ஆங்கிலமூதறிஞரான பேகன்கட்டுரையின் மொழிபெயர்ப்பு.)

ஆண்டி னிளைஞனும் தான் பயன்படுத்திய பொழுதளவில் முதியனாகலாம். எனின் அது அரியசம்பவம். (ஊன்றியெழும், பின்னெண்ணம்போல உரமுடையதாகாத (ஆழச்சிந்தியாத) முதற் கருத்தனையது

இளமை. ஏனெனில் வயதிற்போலவே எண்ணத்திலும் இளமையுண்டு. ஆயினும், இளைஞரின்கற்பனை முதியர் முதுக்குறைவினுந் துலக்கமுடையது; (முதியர்மனத்திலும்) இளைஞருள்ளத்தில் மனோபாவங்கள் மிகுதியாயும் தெய்விகமாயும் பெருகுகின்றன. ஜூலியஸ் ஸீஸர், ஸெப்டிமியஸ் ஸெவரஸ் இவர்களிடம் கண்டதுபோல அதியுற்சாகத்துடன் மிகுவேகவிருப்பங்களும் வைகல்யக் கலக்கங்களுமுடைய சுபாவங்கள் நடுவயதுகழியுமட்டும் பெருவினையேற்கப் பருவமடையா. மேலவருட் பின்னையர் வாலிபவழுக்களும் அவற்றினுமதிகமாய் வெகுளி மிகுதியும் உடையரென்றுரைக்கப்படுவர். எனினும், (உரோம) சக்கரவர்த்திகளனைவரினும் இவரே பெருந்திறலுடையரானார். அகஸ்டஸ் ஸீஸர், காஸ்மஸ், பிளாரன்ஸ் பிரபு, காஸ்டன்டிபாய் அனைய பிறரிடம் காணுமாறு சாந்தசுபாவங்களோ இளமையிலே நன்றுற்ற வல்லனவாம். அதற்குமாறுதலைபாக வயதினில் வரும் ஊக்க உத்ஸாகங்கள் முயற்சிக்கினிய செயற்கையாகும். இளைஞர் தூக்கித்துணிவதிலும் கற்பனைக்கு மிக உரியராவர்; சூழ்வதினும் செய்தற்கு மிகவுரியர். துணிந்த தொழிலியற்றுதலினும் புத்துபாயங்கள் சூழ்தற்குரியர். முதனுபவமோ தன்னளவில் வருபவற்றை வழிவகுத்து நனிநடத்தும்; புதியவற்றுட் டவறிபற்றும். இளையோர் வழுக்கள் தொழிலழிவுசெய்யும்: முதியவர் தவறுகள் அளவினும் விரைவினு மாவனவாற்றக் குறைவினோடமையும். இளைஞர் வினைசெயல் நிர்வாகங்களை இயல்வதினும் மிக மேற்கொள்வர்; ஆற்றுதற்கதிகம் அவர் மூட்டுவர்; கருவியும் தகுதியும் கருதுகின்றிலராய், இறுதியினெல்லைக்கெழுந்து பறப்பர். நினையாது தன்வழிநேர்ந்த சிலநியமங்களைப் பிசகுதொடர்வர்; அறியா அவலங்கட்காட்படுத்தும் புதுமுறை வகுப்பதிற் கவலைகொள்ளார். கடைநிலைச்சிகிச்சைகளை முதலில் மேற்கொள்வர்; நில்லா மீளா அமையாப் புரவிபோல், இளையர் தம் வழுக்களை இருமடங்காக்குவதன்றி ஓர்வதும் ஒழிப்பதும் உணர்வதில்லை. முதியரோ சதா மட்டின்றி நீண்டு நிதானிக்கின்றார், சாகஸ வறுமை தாமிகவுடையர், விரைந்தனுதாப மேவிடுகின்றார், (விழுமிய பயன்பெறத்) தொழில் முழுதாற்ற ஊக்கவொல்லாராய், மத்தியசித்தியில் திருப்தியடைகின்றனர். இரண்டையும் இணைத்து ஏவல்கொள்ளுதல் இனிதென்பது சாதப்: ஏனெனில் இவை ஒவ்வொன்றின்சீலமும் மற்ற தன்குறை நிறைக்குமாதலான். இவை பிணைதல் நிகழ்வுக்கு நலமாகும்;

இளைஞராய்க் கற்பதற்கும் முதியராய் ஆற்றுதற்கும் உதவுகையால் எதிர்வுக்கும் இதுவே நலமாம்; பிரமாணம் முதியரையும், அபிமானமும் ஜனசம்மதமும் இளையரையும் போற்றுதலால், வெளிவிபத்துக்களுக்கும் இதுவே நன்மைதரும். எனினும், இறைமையிற்கு முதுமையுதவுமாறு, சான்றாண்மைக்கு இளமை தலையாவதாம்போலும். "உமதிளைஞர் (கண்காணாக்) காட்சிகளையும், முதியோர் கனவுகளையுங் காணுவர்" என்னும் மூலபாடத்தை ஆதாரவாகக்கொண்டு ஒரு யூதபோதகன் "கனவினுங் காட்சி தெளிவுடையதாகையால், இளைஞரே முதியரினும் கடவுளுக்கணியராவர்" என்று அநுமானிக்கிறான். நுகர்பவரை உலகறிவு மயக்குவதும் உண்மையன்றே; விருப்ப வேட்கைகளின் சான்றாண்மையினும், விவேகவிருத்திகளிலேயே முதுமை பயனுகருகின்றது. இளமையிற்கனிந்து விரைவினிற் கழியுந் தெளிவுஞ் சிலர் உடையராவர். இவருள் முதலொருசாரார் உடையுமுரவுடையராய், அதன் கூர்மை விரைவில் மழுங்கப்பெறுகின்றனர்; முன்னர் மிகவும் நுணுகியாழ்ந்த நூல்களைச் செய்து பின்னாட் கழிமடம் வளர்த்த *ஹேர்மோஜினீஸ் என்னும் நாவலர் இத்தகையர். மற்றொருசாரார் முதுமைக்குதவா இளமைக்கினிதாம் வளத்தொடு விரையக்களைத்தலொத்த வயதினும் வாலிபத்தே மிக அழகுசெய்யும் சில இயல்பாந்நன்மைகள் உடையர்; "தரிக்ககில்லன் தெரிக்கவுமொல்லன" என்று †தல்லி சொல்லும் ஹார்டன்ஸியஸ் அனையர் இவர். நீளுமாண்டுகள் நிறுவவொண்ணாத பெருந்தகைமைபேணி, பொறுத்தற்கரிய வருத்தமேற்கொள்வர் இன்னுமொருசாரார். "முற்று முதலிலகி இற்றிறுதிவிலகு" பவனாக ‡'லிவி' கூறும் 'ஸிபியோ ஆபிரிகானஸ்' அன்னவர் இன்னோர்.

ச. சோ. பாரதி.

---

* இவன் கிரேக்கநாவலன். †.‡. இவர் உரோம சரித்திர ஆசிரியர்.

௨

# பழிக்குப்பழி.

[இது ஆங்கிலமுதறிஞனாகிய பேகன்கட்டுரையின் மொழிபெயர்ப்பு.]

பழிக்குப்பழி, குரூரமாய் நியாயம்பெற்றிடும்வழிகளி லொன்றாம். மனிதரியற்கை எவ்வளவுக்கெவ்வளவு அதில் மனம்பற்றிச்செல்லுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு *அறமும் அதைக் களைதல்வேண்டும். ஏனெனில் முதற்குற்றம் அறநூலையே மீறுகின்றது; அப்பழிக்கெதிர்ப்பழியோ அறத்தின் வேலையை ஒழித்துவிடுகின்றது. பழிக்குப்பழி வாங்குவதில் ஒருவன் தன்னெதிரிக்குச் சரிக்குச்சரி செய்கின்றான் என்பது சரதமே ஆனால் அப்பழி பாராட்டா தொழுகுவதில் அவன் பெரிதுத்தமனாகின்றான். ஏனெனில், பொறுப்பது கோமகற்கழகாம். குற்றங்களைப் பாராட்டாது நடந்தொழுகுவது மனிதனுக்கு அரும்பெருமையாகும்,—என்று சாலமன் சொன்னதுண்டு. கழிந்தது கழிவேயாகும்; மீண்டெழுவதில்லை. நடப்பனவும், நடக்கபோவனவும்பற்றிச் சிந்திப்பதே விவேகிகட்குப் போதுமானவேலையாகும். சென்றவைபற்றி வேதனைப்படுவார் தத்தமக்குள் விளையாடுவாரேயாவர். குற்றமேபயனாக் குற்றம்செய்வா ரில்லை; ஆனால் அது கொண்டு ஆதாயம், இன்பம், கௌரவம் இனையவற்றொன்றை விலையாகக் கொள்வாராவர். ஆகவே என்னைவிடத் தன்னையே ஒருவன் அதிகமாய்க் காதலிப்பது கொண்டு நான் அவனைக் கோபிப்ப தாமா? இயற்கையமைப்பாலமைந்துள்ள கெட்ட சுபாவத்தாற் குற்றமிழைப்போர், குத்திக்கிழிப்பதொழியப் பிறிது செயலறியா இயல்புடைய முட்செடியும் முள்ளும் போல்வாராவர். பழிக்குப்பழிவாங்குவதில் அறமுறையால் நிவிர்த்திக்கவொண்ணாச் சில குற்றங்களே பொறுக்கத்தகுவனவாம். அப்பழிக்கெதிர்ப்பழியும் அறமுறையால் தண்டமிறக்கொணாததென அவன் (அஃதிழைப்போன்)

---

* அறம் = சட்டம் (Law).

தெளிதல்வேண்டும். அல்லாதவரை அவன் பகைதக்கிலன்; அதற்கு மாருக அவன்பகை ஒன்றுக்கிரண்டாகும். சிலர் பழிக்குப்பழிவாங்கும் போது, எங்கிருந்து இப்பழிவருகின்றது என்று தம்பகைவர் உணர வேண்டுமென்று அவாவுகின்றனர். இது மற்றதினும் கருணைவாய்ந்தது; ஏனெனில் எதிரி (தன்குற்றம்) உணர்ந்து அனுதாபப்படச்செய்வதிற் போல், அவனைத் துன்புறுத்துவதில் மகிழ்ச்சிகொள்வதில்லை; ஏனெனில் அற்பத்தனமுள்ள கள்ளக்கோழைபர் நள்ளிருளில் துள்ளிவந்த அம்பன்னர். காஸ்மஸ் அரசன், வஞ்சனையும் அலட்சியமுமுடைய நண்பரைப் பற்றி, அவர்குற்றங்கள் பொறுக்கொணுதனபோல் உரைக்கும் கடுஞ்சொல்லொன்றுண்டு:—அது "துன்னலரைமன்னிக்க எமக்காணைகண்டீர்; உட்பகையாந் துன்னலரை மன்னிக்கும் ஆணைகாணீர்" என்பதாம். "கடவுளிடம் நன்மைபெறும் நாம் அவர் தரும் தீமையை மறுப்பது முறையோ"?—என்ற 'ஜாப்' என்பவரின் தத்துவம் முன்னதினும் சாரம் மிகுந்தது. கடவுளிடம்போலவே நண்பரிடமு மியன்றவளவு அமைத்துக் கொள்வோம். பழிக்குப்பழிபாராட்டுவான் மற்றப்படி ஆறிக் குணப்படும் புண்ணைப் பசும்புண்ணுப் பாதுகாப்பானெருவனெப்பான் என்ப துண்மை. ஸீசர் மரணம், பெட்ரினிக்ஸ் மரணம்; பிரான்சுதேயத்து மூன்ருவது ஹென்றியின் மரணம் இனைய அநேகமரணத்திற்போலச் சமூகப்பழிவாங்கல் பெரும்பாலும் நன்மையேபயக்கும். ஆனல், சொந்தப் பழிக்குப் பழி அத்தகைய தாகாது. பழிக்குப் பழி பாராட்டுவார் சூனிய மந்திரவாதியைப்போலக் காலங்கழிப்பர், வம்பாய் வாழ்ந்து பாவிகளாய் முடிகின்ருர்கள்.

கிருஷ்ணசாமிப்பிள்ளை (B.A., Hons.)

# ஸ்வப்ன வாசவ தத்தம்.

[ரு உ-ம் பக்கத்தொடர்ச்சி.]

## ஆரும் அங்கம்.

(கஞ்சுகிவருதல்.)

கஞ்சுகி:— இங்கே பொற்ருேரணவாயில்காப்பது யார்?

(பிரவேசித்தல்)

துவாரபாலிகை:—ஐயா! நான்தான் விஜயை; என்ன செய்யவேண்டும்.

கஞ்சுகி:— அம்மா! வத்ஸநாட்டைமீட்டுக் கீர்த்திவளரப்பெற்ற உதயனனிடம் "மஹாஸேனரிடமிருந்து ரைப்பியன் என்ற பெயருள்ள கஞ்சுகியும் அங்காரவதிதேவியார் அனுப்பிய வாஸவதத்தையின் செவிலித்தாய் வஸுந்தரையம்மாளும் இதோ வாயிலில் வந்திருக்கிருர்கள்" என்று விண்ணப்பம்செய்யவேண்டும்.

துவார:— ஐயா! இது விஜ்ஞாபனம்செய்யத் தகுந்தசமயமன்று.

கஞ்சுகி:—ஏன் இது தகுந்தசமயமில்லே?

துவார:— ஐயா! கேளுங்கள்; இன்று பத்மாவதியின் அரண்மனைக்கருகில் யாரோ ஒருவன் வந்து வீணைவாசித்தான். அரசர் அதைக் கேட்டுக் "கோஷவதியின் நாதம்போலிருக்கிறதே" என்று சொன்னுர்.

கஞ்சுகி:—பிறகு?

துவார:— உடனே அவனிடம் சென்று "இந்த வீணை எவ்விடத்திலிருந்து உனக்குக் கிடைத்தது" என்று கேட்டார். அதற்கு அவன் "இது நர்மதையாற்றின்கரையில் தருப்பைப்புற்புதரில் புதைந்துகாணப்பட்டது. பயன்படுமாயின் இதைப் பெற்றுக்கொள்ளவேண்டும்" என்று விடையளித்தான். பின் அரசர் அதனை எடுத்து மடியில்வைத்துக்கொண்டதும் மூர்ச்சையடைந்தார். பிறகு மூர்ச்சைதெளிந்து வியாகுல

முற்றிக் கண்ணீரால் நனைந்த முகத்துடன் "ஹா! கோஷவதி! உன்னைக் கண்டேன், ஆனால் அவளைக் காணவில்லையே!" என்று சொல்லி வருந்தினார். ஐயா! அதனால்தான் நான் சமயம் அல்லவென்று சொன்னேன். எப்படித்தெரிவிப்பேன்?

கஞ்சுகி:— அம்மா! விஜ்ஞாபனம்செய்யலாம் எங்கள்வாவும் அதை யொட்டியதுதான்.

துவார:— இதோ நான் தெரிவிக்கிறேன். தலைவர் பத்மாவதிதேவி யரண்மனையைவிட்டிறங்கிவருகிறார். இங்கேதெரிவிக்கிறேன்.

(உதயனனும் விதூஷகனும்வருதல்)

உதயனன்:—செவிக்கினிய நாதந்தரும் வீணையே! தேவியின்மார்பிலும் மடியிலும் சுகநித்திரைசெய்த நீ பறவைக்குலம் உன்மேனியை எச்சமிட்டு அசுத்தப்படுத்தப் பயங்கரமான வனவாஸத்தை எவ்வாறு பொறுத்தாய் ஆ! கோஷவதி! இன்னும் உனக்கு உணர்ச்சியில்லையே! இரங்கத்தக்க தேவி உன்குடத்தை மடியில்வைத்துக் கையாற்கட்டியணைத்ததும் தான் தளர்ச்சி யுறும்பொழுது ஸ்தனங்களுக்கிடையில் உன்னைச் சுகமாகத் தழுவிக்கொண்டதும் என்னைப் பிரிந்த விரகதாபத்தால் உன்னைச் சோகத்துடன் வாசித்ததும் அவ்வாசிப்பிற்கிடை யே புன்முறுவலுடன் அவள் பேசியதும் உனக்கு நினைவில்லையே!

விதூ:— அரசே! இப்பொழுது நீர் வருத்தப்பட்டதுபோதும்.

உதயனன்:—நண்ப! அல்ல! அப்படியல்ல! வெகுகாலம் உறங்கிக்கிடந்த எனது காதல் இப்பொழுது வீணையால் விழித்துக்கொண்டது. ஆனால் அவ்வீணைமீது அன்புவைத்திருந்த தேவியைக் காணவில்லை. வஸந்தக! கோஷவதியைச் சிற்பிகளிடமெடுத் துச்சென்று சீக்கிரம் புதுப்பித்துக் கொண்டுவா.

விதூ:— அரசே! அவ்வண்ணமே செய்கிறேன்.

(வீணையை எடுத்துக்கொண்டுபோதல்)

துவார:— (பிரவேசித்து) அரசர்பெருமான் வெற்றிபெறுக! மஹாஸேன ரிடமிருந்து ரைப்பியன் என்ற பெயருள்ள கஞ்சுகியும்

அங்காரவதிதேவியாரனுப்பிய வாஸவதத்தையின் செவிலித்தாய் வஸுந்தரையும் வாயிலில் வந்திருக்கிறார்கள்.

உதயனன்:—ஆனால் பத்மாவதியை அழைத்துவா!

துவார:— அரசே! கட்டளைப்படிசெய்கிறேன் (போதல்)

உதயனன்:—என்ன! மஹாஸேனர் என் சமாசாரத்தை இவ்வளவுசீக்கிரம் அறிந்துகொண்டாரா?

(பத்மாவதியும் துவாரபாலிகையும்வருதல்)

பத்மா:— என்னன்பர் வெற்றிபெறுக!

உதயனன்:—பத்மாவதி! மஹாஸேனரிடமிருந்து ரைப்பியன் என்ற பெயருள்ள கஞ்சுகியும் அங்காரவதிதேவியாரனுப்பிய வஸுந்தரையென்று பெயருடைய வாஸவதத்தையின்செவிலித்தாயும் வாசலில்வந்திருப்பதை நீ கேள்விப்பட்டாயோ?

பத்மா:— நாதா! என் உறவினருடைய க்ஷேமஸமாசாரத்தைக்கேட்க நான் ஆசையுடன் இருக்கிறேன்.

உதயனன்:—வாஸவதத்தையின் உறவினரை உன் உறவினராகக்கூறியது உன்பெருமைக்குத்தக்கதே. பத்மாவதி உட்கார்; ஏன் உட்காரவில்லை?

பத்மா:— நாதா! என்னோடு சேர்ந்தா இவர்களைப் பார்க்கப்போகிறீர்கள்?

உதயனன்:—அதிலென்னகுற்றம்?

பத்மா:— தங்களது இரண்டாவதுதாரம் என்பதனால் இவர்களுக்கு அன்பு குறைவுபடும்.

உதயனன்:—எனது தலைவியின் காட்சிபெறுதற்கு உரிமையுடையாரை அக் காட்சி நல்காது போகவிடுவது பெருங்குறையாகும், ஆதலால் உட்கார்.

பத்மா:— என நாதன் ஆஜ்ஞைப்படி, (உட்கார்ந்து) நாதா! என் தாய் தந்தையர் என்னசொல்லப்போகிறார்களோவென்று நடுக்கமுறுகிறேன்.

உதயனன்:—பத்மாவதி! அவ்வாறே அவர்கள் என்னசொல்லுவார்களோவென்று எனது உள்ளமும் தடுமாறுகிறது. நான் கன்னிகையை அபகரித்துக்கொண்டுவந்தேன்; ஆனால் காப்பாற்றினே

னில்லை. துர்ப்பாக்கியவசத்தாற் பெரியோரைப் பிழைத்துத் தந்தையின்கோபத்திற்குப்பாத்திரமான மகனைப்போல் மனம் நடுங்குகிறேன்.

துவார:—இதோ கஞ்சுகியும் செவிலித்தாயும் வாசலில் வந்திருக்கிறார்கள்.

உதயனன்:—சீக்கிரம் உள்ளேவரட்டும்.

துவார:— அரசே! உத்தரவுப்படி. (போதல்)

(கஞ்சுகியும் செவிலித்தாயும் துவாரபாலிகையும் வருதல்)

கஞ்சுகி:—சம்பந்திகளுடைய இந்த ராஜ்யத்திற்குவந்து பெரிதும் சந்தோஷமடைந்தேன். ஆனால் எங்கள் ராஜகுமாரி இறந்ததை நினைக்கக் கடுந்துக்கம் வருகிறது. அந்தோ தெய்வமே! இழந்தராஜ்யம் கிடைத்தவுடன் தேவியும் க்ஷேமமாயிருந்தால் எங்கள்விஷயத்தில் உன்னாற் செய்யப்படாதது என்ன?

துவார:— ஐயா! அரசர் இதோ இருக்கிறார்; நீர் அடுத்துச்செல்க.

கஞ்சுகி:—(அடுத்துச்சென்று) அரசர்பெருமானுக்கு வெற்றி விளைக!

உதயனன்:—(ஆதரவுடன்) ஐயா! உலகிலுள்ள அரசர்குலத்துக்கெல்லாம் ஆக்கக்கேடுகள் விளைக்கவல்லவரும் என்னால் விரும்பப்பெற்ற உறவினரும் ஆகிய அரசர் சௌக்கியமா?

கஞ்சுகி:—ஆமாம்; மஹாஸேனர் ஸௌக்கியமாயிருக்கிறார்; இங்கு எல்லோருடைய சௌக்கியத்தையும் விசாரிக்கிறார்.

உதயனன்:—(ஆஸனத்தினின்றும் எழுந்து) என்ன ஆணையிடுகிறார் மஹாஸேனர்?

கஞ்சுகி:—இது வைதேகியின்புத்திரருக்குத் தக்கதே. ஆனால் அரசர் ஆஸனத்திலிருந்தே மஹாஸேனரது ஸமாசாரத்தைக் கேட்க வேண்டும்.

உதயனன்:—மஹாஸேனரதுசித்தப்படி செய்கிறேன். (உட்காருதல்)

கஞ்சுகி:—"சந்தோஷம், பகைவர் அபகரித்த ராஜ்யத்தை நீர் மீண்டும் பெற்றீர்; ஏனென்றால் பேடிகளுக்கும் ஆற்றலற்றவர்களுக்கும் வினைத்திட்ப முண்டாவதில்லை. ஊக்கமுடையோர்களே பெரும்பாலும் ராஜ்யலக்ஷ்மியை அனுபவிப்பார்கள்."

உதயனன்:—ஐயா! இவையெல்லாம் மஹாஸேனர்பெருமையின்விளைவே யன்றி வேறல்ல. பண்டு நான் தோல்வியுற்றுப் பிடிக்கப் பட்டேன்; அப்போது அவர் தம் புத்திரரோடு என்னை விளையாடவிடுத்தார். பிறகு அவர் புதல்வியை அபகரித்துக் கொண்டுசென்றேன்; பின், அவளை ரக்ஷிக்கவுமில்லை. அவள் இறந்தாள் என்று கேட்டும் அவர் முன்போலவே என்னிடம் உறவுபாராட்டுகிறார். எனக்குரிமையான வத்ஸநாட்டை நான் திரும்பப்பெற்றதற்கும் அவரன்றோ காரணம்!

கஞ்சுகி: இது மஹாஸேனரது ஸந்தேசம். ராணியாரின் ஸந்தேசத்தை இதோ வஸுந்தரையம்மாள் சொல்லுவார்.

உதயனன்:—ஆ! அம்ம! பதினறுராணிகளுக்குள் தலைமைபெற்றவரும் புண்ணியமிக்க நகரதேவதைபோன்றவரும் என்பிரிவாற்றாமல் வருந்துகிறவருமான என் தாய் சௌக்கியந்தானா?

சேவிலி:—ராணியார் சௌக்கியமே; அவர் அரசர் முதலானோரது சௌக்கியத்தை விசாரிக்கிறார்.

உதயனன்:—எல்லோரும் சௌக்கியமா? என்று? இப்படி எல்லோரும் சௌக்கியந்தான்!

சேவிலி:—அரசே! வருந்தியது போதும்.

கஞ்சுகி:—அரசே! தாங்கள் இத்தனை இரக்கமடைவதால் மஹாஸேனரது புதல்வி இறந்தாளாயினும் உயிர்வாழ்கின்றவளேயாவள். இறக்குங்காலம்நேர்ந்துவிட்டால் யார் யாரைக் காப்பாற்றுவர்? கயிறு அற்றுவிட்டாற் குடத்தைத் தாங்குபவர் யார்? ஒருகாலத்தில் அழிவதும், ஒருகாலத்தில் ஆவதுமான வனம்போல அவ்வக்காலத்தில் வாழ்வதும் தாழ்வதும் உலகவியல்பே!

உதயனன்:—ஐய! அல்ல; அப்படியல்ல, மஹாஸேனரதுபுதல்வி, என் பிரியசிஷ்யை; பட்டமஹிஷி; அவளை எப்படி நான் மறுபிறப்பிலும் நினையாமலிருப்பேன்!

சேவிலி: "நானும் மஹாஸேனரும் உம்மை எங்கள் கோபாலகனையும் பாலகனையும்போல நேசித்து எங்கள் மருகனுக்கக்கருதினேம்,

அதன்பொருட்டே உம்மை உச்சயினிக்குக் கொண்டுவந்தோம். வீணை கற்பித்தலை மேலிட்டு அக்நிசாக்ஷியின்றியே உமக்குப் பெண்ணைக் கொடுத்தோம். திருமணம் மங்களமாய் நிறைவேறுமுன் உமது சாபல்யத்தால் அவளுடன் ஒளித்தோடிப்போய்விட்டீர். பிறகு நாங்கள் உமது உருவத்தையும் வாஸவதத்தையின் உருவத்தையும் சித்திரப்பலகையிலெழுதித் திருமணம் கொண்டாடினோம். வாஸவதத்தை இறந்துவிட்டாள்; அந்தச் சித்திரப்பலகை இதோ உமக்கு அனுப்பப்படுகிறது. அதைக் கண்டு ஆறுதலுற்றிரும்;" என்று எங்கள் மஹாராணியார் சொல்லுகிறார்.

உதயனன்:—அந்தோ! இப்பேரரசியுரைத்தது அன்பும் தகுதியும் ஒருங்குவாய்ந்த சொற்களே! குற்றஞ்செய்த என்னிடத்திலும் அன்புமறவாது மொழிந்த இச்சொல் எண்ணிறந்த ராஜ்யங்களைப்பெறுவதினும் அதிகமாக விரும்பக்கூடியது.

பத்மா:— நாதா! சித்திரத்தில் வரைந்திருக்கும் என் தமக்கையை வணங்க விரும்புகிறேன்.

செவிலி:—இளவரசி! பாருங்கள். பாருங்கள். (சித்திரப்பலகையைக் காட்டுதல்.)

பத்மா:— (பார்த்துத் தனக்குள்) ஆ! ஆ! இதென்ன! இந்தச் சித்திரம் ஆவந்திகையம்மாளோடு மிகவும் ஒத்திருக்கிறதே! (வெளிப்பட) நாதா! இந்தச்சித்திரம் என் தமக்கையை ஒத்திருக்கிறதா?

உதயனன்:—ஒத்திருப்பதன்று. அவள்தானென்று எண்ணுகிறேன். ஹா! கஷ்டம். இவ் விஸிமநிறத்திற்கு எவ்வளவு கோரமான ஆபத்து நேர்ந்துவிட்டது; இம்முகத்தின் மாதுரியத்தை எப்படித்தான் நெருப்பும் எரித்தது!

பத்மா:— நாதா! இது என் தமக்கையை ஒத்ததா அல்லவா என்பது தங்கள் பிரதிரூபத்தைக் கண்டு நிச்சயித்தல்வேண்டும்.

செவிலி:—இளவரசி! பாருங்கள்; பாருங்கள்.

பத்மா:— (உதயனன்பிரதிரூபத்தைத்பார்த்து) இந்தப்பிரதிரூபம் தங்களை ஒத்திருப்பதால் இதுவும் அவரதென்றேநினைக்கிறேன்,

உதயனன்:—தேவீ! சித்திரத்தைக்கண்டது முதல் சந்தோஷத்துடனும் பதட்டத்துடனும் இருக்கிறாய். இது என்ன?

பத்மா:— நாதா! இந்தச்சித்திரத்தை முழுதும் ஒத்திருக்கும் ஒருத்தி இங்கேயே வாஸம்செய்கிறாள்.

உதயனன்:—என்ன! வாஸவதத்தைக்குச் சரியானவளா?

பத்மா:— ஆம்; ஆம்.

உதயனன்:—ஆனால் சீக்கிரம் வரவழை!

பத்மா:—நாதா! நான் கன்னிகையாயிருக்கும்பொழுது ஒரு பிராமணன் அவளைத் தன் சகோதரியென்று என்னிடம் அடைக்கலமாகவைத்துப்போனான். கணவனைப் பிரிந்திருப்பதால் அவள் பரபுருஷரைப் பார்ப்பதில்லை. அதனால் என்னுடன் வந்து தெரிந்துகொள்ளவேண்டும்.

உதயனன்:—அந்தணன்சகோதரியானால் நிச்சயமாய் அவள் வேறொருத்தி தான் உருவங்கள் ஒன்றோடொன்று ஒத்திருப்பது உலகத்திற் காணப்படுவதே.

துவார:— (பிரவேசித்து) அரசர்பெருமானுக்கு வெற்றிவிளைக! உச்சயினியிலிருந்து அந்தணரொருவர் இளவரசியிடம் அடைக்கலமாகவைத்துவிட்டுப்போன தன் சகோதரியைத் திரும்பப்பெற்றுக்கொள்ள இதோ வாசலில் வந்திருக்கிறார்.

உதயனன்:—பத்மாவதீ! நீ சொன்ன பிராமணன் தானோ?

பத்மா:— இருக்கலாம்.

உதயனன்:—வேண்டும் உபசாரங்கள்செய்து அவரைச் சீக்கிரம் உள்ளே அழை

துவார:— அரசர் உத்தரவுப்படி. (போதல்)

உதயனன்:—பத்மாவதி! நீயும் உன் அடைக்கலமாதை அழைத்துவா.

பத்மா:— என் நாதன் ஆக்ஞைப்படி. (போதல்)

(துறவிவேஷம்பூண்ட யௌகந்தராயணனும் துவாரபாலிகையும்வருதல்)

துறவி:— (தனக்குள்) ஆ! மன்னரது நன்மையைக்கருதிப் பட்டமகிஷியை மறைத்துவைத்துப் பத்மாவதியின் விவாகத்தை

யும் அவருக்குப் பிரியமென்று செய்வித்தேன். இப்பொழுது எண்ணியகருமம் நிறைவேறிவிட்டது. அரசர் என்னசொல்லுவாரோ என்று என்னுள்ளம் பதறுகிறது.

துவார:— அரசர்பெருமான் இதோ இருக்கிறார். நீர் அடுத்துச்செல்லுக.

துறவி:— உமக்கு வெற்றிவிளைக.

உதயனன்:—குரல் முன்கேட்டதுபோலிருக்கிறதே. ஹே பிராமணா! நீர் உமதுசகோதரியை அடைக்கலமாகவைத்ததுண்டா?

துறவி:— ஆம்; ஆம்.

உதயனன்:—(துவாரபாலிகையை நோக்கி) அங்ஙனமாயின் இவரது சகோதரியை விரைவில்அழைத்துவா!

துவார:— அரசர் உத்தரவுப்படி. (போதல்)

(பத்மாவதியும், ஆவந்திகையும், துவாரபாலிகையும் வருதல்)

பத்மா:— (ஆவந்திகையைநோக்கி, அம்மா! வரவேண்டும் வரவேண்டும். உங்களுக்கு ஓர் நற்செய்தி சொல்லுகிறேன்.

ஆவந்தி:—என்னசெய்தி, என்னசெய்தி.

பத்மா: – உமதுசகோதரர் வந்துவிட்டார்.

ஆவந்தி:—நல்லகாலம். இப்பொழுதாவது அவருக்கு ஞாபகம்வந்ததே.

பத்மா:— (அரசனை அடுத்து) என் அன்பருக்கு வெற்றி உண்டாக! இதோ என் அடைக்கலம்.

உதயனன்:–பத்மாவதி! திரும்பக்கொடு. சாக்ஷியுடன் அடைக்கலத்தைத் திரும்பக்கொடுக்கவேண்டும். இதோ ரைப்பிய நம்வஸுந்தரையம்மாளும் இதற்குச் சாக்ஷிபாவார்கள்.

பத்மா:— ஐயா! உமது சகோதரியை அழைத்துக்கொண்டுபோம்.

சேவிலி:—(ஆவந்திகையைஉற்றுநோக்கி) ஆ! இளவரசி! வாஸவதத்தை!

உதயனன்:–என்ன! மஹாஸேனர்புதல்வி வாஸவதத்தையா? பத்மாவதியோடு உள்ளேசெல்!

துறவி:— கூடாது. உள்ளேசெல்லக்கூடாது. இவள் எனதுசகோதரியல்லவா!

உதயனன்:-நீர் என்ன சொல்லுகிறீர்! இவள் மஹாஸேனர்புதல்வியன்றோ?

துறவி:— அரசே! பாண்டவாதுகுலத்திலுதித்துக் கற்பனவெல்லாம் கற்றறிந்து மேன்மையான அறமும் சீலமும் வாய்ந்து ராஜ தர்மத்தை நடத்தும் ஆசிரியர்போன்ற நீர் இவளைப் பலாத் காரமாக அபகரிப்பது உசிதமன்று.

உதயனன்:—இருக்கட்டும். ஆனால் பிரதிரூபம் ஒத்திருப்பதைப் பார்ப் போம். திரைச்சீலையைச் சுருக்கவேண்டும்.

யௌகந்த:-(துறவிவேஷத்தைநீக்கித் தனது சொந்தவேஷங்கொண்டு) எனது அரசருக்கு வெற்றியுண்டாக!

வாஸவ:—என் நாதனுக்கு மங்களமுண்டாக.

உதயனன்:—ஆ! இதோ யௌகந்தராயணன்; இதோ மஹாஸேனரது புத்திரி! நான் மீண்டும் இவளைப் பார்ப்பது கனவோ அல்லது நனவோ? இதுபோல் முன்னுமொருமுறை நான் இவளைக் கண்டபொழுது வஞ்சிக்கப்பட்டேன்.

யௌகந்த:—அரசே! தேவியை மறைத்துவைத்ததால் நான் குற்றவாளி யாயிருக்கிறேன். என்னை மன்னித்தருளவேண்டும்? (உதய னன்கால்களில்விழுதல்)

உதயனன்:—(கைகொடுத்தெடுத்து) நீ! யௌகந்தராயணன் அல்லனா! என்பொருட்டுப் பித்தனாய்த்திரிந்து, போர்புரிந்து, நூல்க ளிற்கூறியசூழ்ச்சிகள் பலவுஞ் செய்த உன்னாலன்றோ முழுகிப் போனநான் கரையேற்றப்பெற்றேன்.

யௌகந்த:-எங்கள் அரசர்பெருமானுடைய பாக்கியங்களைத் தொடர்ந்து நடந்தோம்.

பத்மா:— ஆ! இவர் என் தமக்கையல்லவா! அம்மா! அறியாமையால் உம்மைத் தோழியென்றெண்ணிப் பிழைசெய்துவிட்டேன்; அதற்குத் தலையால் வணங்கி மன்னிப்பு வேண்டிக்கொள்ளு கிறேன்.

வாஸவ:—(பத்மாவதியைக் கைகொடுத்தெடுத்து) கற்பாசி! எழுந்திரு; எழுந்திரு; வறுமையுற்றோருக்குச் செல்வம்போலவிளங்கும் உன்சரீரம் பிழைசெய்ததா?

பத்மா:—உமது அனுக்கிரகம்பெற்றேன்.

உதயனன்:—நண்ப! யௌகந்தராயணா! எதற்காகத் தேவியை மறைத்து வைத்தாய்.

யௌகந்த:—கௌசாம்பிராஜ்யம்முழுவதும் ஆளவேணுமென்று.

உதயனன்:—ஆனால், பத்மாவதியிடம்கொண்டுபோய்வைத்தற்கு என்ன காரணம்?

யௌகந்த:—பத்மாவதி அரசருடையதேவியாவாள் என்று புஷ்பகர் பத்ரகர்முதலிய ஸித்தர்கள் சொன்னார்கள்.

உதயனன்:—இது உருமண்வானுக்குத் தெரியுமா?

யௌகந்த:—அரசே! அனைவருக்கும் இது தெரியும்.

உதயனன்:—ஆ! உருமண்வான் எவ்வளவு வஞ்சகன்!

யௌகந்த:—அரசே! தேவியின்க்ஷேமஸமாசாரத்தைத் தெரிவிக்க ரைப்பியரும் வஸுந்தரையம்மாளும் இன்றே உச்சயினிக்குப் போகவேண்டும்.

உதயனன்:—இல்லை, இல்லை; பத்மாவதிதேவியோடு நாம் அனைவரும் போவோம்.

யௌகந்த:—அரசரது ஆணைப்படியே!

(பாதர்சொல்)

இமய விந்திய மலைகளைக் குண்டலமாயணிந்த கடலாற் சூழப்பெற்ற பூமியை எங்கள் ராஜஸிம்ஹன் ஒருகுடையினளாம்படி யாளட்டும்.

(எல்லோரும்போதல்)

ஆறும் அங்கம் முற்றிற்று.

ஸ்வப்ன வாசவதத்தம் முற்றிற்று.

ஜி. ஹரிஹராசாஸ்த்ரி,

திருவனந்தபுரம்,

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[உச-ம் பக்கத்தொடர்ச்சி.]

[குகன் பின்னும் தன்பரிசனரை நோக்கிப் "பரதன் குறிப்பு இன்னதென்று நான் சென்று தெரிந்து திரும்புவேன்; அதுவரையும் நீங்கள் அவர்கள் இந்த வழியைக் கடவாமற் காத்துநில்லுங்கள்" என்று சொல்லிப் பரதன் நின்ற இடத்துக்குத் தனியே வந்தான்.]

332. வந்தெதிரே தொழுதானை வணங்கினன், மலர் இருந்த
அந்தணனும் தனைவணங்கும் அவனும்; அவன் அடிவீழ்ந்தான்;
தந்தையினும் களிகூரத் தழுவினன், தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்.

இ-ள். வந்து எதிரே (காணும்படி நெருங்கியபோது) கும்பிட்ட குகனைப் பரதனும் கும்பிட்டான்; குகன் பரதன் பாதங்களில் பணிந்தான்; (பணிந்தவனைப்) பரதன் (வாரியெடுத்து மார்போடணைத்துத்) தழுவினன்.

மலர் இருந்த அந்தணனும் தனை வணங்கும் அவனும்—பிரமனும் வணங்கும் (பெருமையுடைய) பரதனும். தந்தையினும் களிகூரத் தழுவினன்—தந்தை (மைந்தனைத் தழுவுங்கால் மகிழ்வுமிகுதலினும் அதிகமாக) மகிழ்வு மிக (ப் பெற்றவனாகிப் பரதன் குகனை)த் தழுவினன். தகவு—(சிறந்த அறிவு ஒழுக்கமுதலிய) தகுதி. சீர்த்தி—மிகுபுகழ். சிந்தையில்வீற்றிருத்தல் சிறப்பாக மதிக்கப்படுதலையும், சென்னியில்வீற்றிருத்தல் சிரமேற்கொண்டு கொண்டாடிப் போற்றப்படுதலையும் குறித்தன.

333. தழுவினன் புளினர் வேந்தன், தாமரைச் செங்கணானை
"எழுவினும் உயர்ந்த தோளாய்! எய்தியதென்னை?" என்ன,
"முழுதுலகளித்த தந்தை, முந்தைபோர் முறையினின்றும்
வழுவினன்; அதனைத்தீர்க்க,மன்னனைக்கொணர்வான்" என்றான்.

இ-ள். (பரதனால் தழுவப்பட்ட) குகன், பரதனை "வந்த காரியம் யாது?" என (வினவ, அதற்கு விடையாகப் பரதன்) சக்கரவர்த்தி, முன்னோர்முறையினின்றும் விலகினான், அந்தக் குறையை நீக்குதற்கு அழைத்துக்கொண்டுபோக" என்றான்.

'எழுதப்பட்ட ஓலை' 'எழுதினஓலை' எனப்படுதல்போல, 'தழுவப் பட்ட புளினர்வேந்தன்' 'தழுவின புளினர்வேந்தன்' எனப்பட்டது. புளினர்-வேடர் எழு-தூண். முந்தையோர்முறை, மூத்தவனுக்கு முடிசூட்டுதலைக் குறித்தது. வழுவினன் என்றது மூத்தஇராமனிருக்க இளைய பரதனுக்கு இராச்சியத்தை அளித்ததைக் குறித்தது. கொணர் வான்-கொண்டுபோம்படி. 'கொணர்வான் வந்தேன்' என்றும் பாடம்.

பரதன் தசரதனை எந்தையென்றானென்றால், சகோதரனாகக்கொண்ட குகனை வேறுபடுத்துக் கூறினானாவானென்பதை விலக்கத் தந்தை யென்றானென்றார் இராமன் விபீடணனோடு சகோதர உரிமை பாராட்டிப் பேசும்போது அவனிடம் (விபீடணன் அடைக்கலப் படலம்—கசசு) தசரதனை எந்தையென்னாது (இந்தப் பாட்டிற்போலப் பொதுவாகத் தந்தையும் என்னாது) உந்தை யென்றதைக் காண்க.

334. கேட்டனன் கிராதர் வேந்தன்; கிளர்ந்தெழும் உயிரனாகி,
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான்; விம்மினன் உவகை வீங்கத்;
தீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன், பொய்இல் உள்ளத்தன், புகல லுற்றான்.

இ-ள். குகன், (பரதன் இராமனை முடிசூட்ட அழைக்கவந்த தாகக்கூறியதைக்) கேட்டான்; (உடனே, மகிழ்ச்சியினால்) ஓங்கிக் கிளைக் கும் உயிரினனாகி, (முன் பரதனை அரசகுலத்தானென்று நிலத்தில் விழுந்து வணங்கியவன் இப்போது அவன் பரம பரித்தியாகியான மகாத்துமாவென்று உணர்ந்து அந்த முறையில் வணங்கும்வணக்க மாகத் திரும்பவும் அவனை) மண்ணில் விழுந்து வணங்கினான்; உவகை மிக, (உடம்பு) பூரித்தான்; பரதன்பாதங்களில் பூட்டப்பட்ட கையின னாய் உண்மையே உள்ள உள்ளத்தினனாய் உரைக்கின்றான்.

கிளர்தல் உயர்தல். மீட்டும்-திரும்பவும். விம்முதல் - பருத்தல் (புறப்பொருள்வெண்பாமாலை). வீங்குதல் - மிகுதல் (புறநானூறு). தீட்டு அரும் மேனி-(சித்திரத்தில்) எழுதுதற்கரிய (அழகுடைய) தேகம்.

இதற் கடுத்த இரண்டுபாட்டுக்களிற் குகன் பரதனைப் புகழ்தல், அவன் உள்ளத்தில் உணர்ந்ததை உணர்ந்தபடியே உரைத்ததன்றி மிகைப்படுத்துக்கூறியதன்றென்பதை உணர்த்தப் பூர்வபீடிகையாகப் 'பொய்இல்உள்ளத்தன்' என்றது குறித்துக்கொள்ளத்தக்கது.

335. " தாய்உரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை யென்ற போது, புகழினேப் தன்மை கண்டால்,
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ, தெரியில், அம்மா!"

இ-ள். "(உனக்கு இராச்சியத்தை அளிக்கும்படி வரங்கேட்ட உன்) தாயின்வார்த்தையை (அங்கீகரித்து)க் கொண்டு உன் தந்தை கொடுத்த பூமியைப் பாவமானதென்று (வெறுத்துக்) கைவிட்டொழித்து (அப்படி விட்டொழித்தது உலகத்தார் ஒப்பக்கொண்ட வேடமன்று, உண்மையே என்பது விளங்க, அகத்தே உள்ள) கவலை (அகங்கொள்ளாமல் வெளிப்பட்டு) முகத்தே நிறைந்துவிட்டா (யானாய்; அப்படி) யானபோது, (அந்த நிலையில்) உன் இயல்பை (அறிஞர்) கண்டால், (அவர் அதனை ஆராய்வார்,) ஆராய்ந்தால் (அவர்களுடைய அபிப்பிராயத்தில்) ஆயிரம் இராமர் உனக்கு ஒப்பாவாரோ! அம்மா! (உன்தன்மை ஆச்சரியமானது.)

தாதை-பிதா. தரணி-பூமி. தீவினை-பாவம். நீத்து-துறந்து. சிந்தனை-கவலை தேக்கல்-நிறைதல் (பிங்கலந்தை உஉஅ). கேழ்-ஒப்பு (ஷி ௩ சஉஅ). 'என்றால்' ஆனால் எனப் பொருள்படல்போல, என்ற ஆன எனப் பொருள்பட்டது. தெரியில்-ஆராய்ந்தால்.

செத்துப்போனான் என்பதிற்போலத் தேக்கிப்போயினை யென்பதில் போ என்பது துணிபுப்பொருளுணர்த்தும் துணைவினையாகவந்தது.

புகழினோய்தன்மை—புகழுடைய உனது இயல்பு. வாலிவதைப் படலம் ககஎ-ம் பாட்டில் 'முறையிலோயை' என்பது முறையில்லாத உன்னை யெனப் பொருள்படவருதல் காண்க.

நிந்தனைப்படலம் 'ஒன்றுகேள்' என்ற சுசு-ம் பாட்டில் 'கொன்று கோள் இழைத்தால் நீநின் உயிர்விடில்' என்பதில் 'கோள்இழைத்தால்' என்பதற்குப்பின் 'நீ உயிர்விடுவாய்' என்பது சுருக்கங்கருதிக் கூறாமல் விடப்பட்டதுபோலக் 'கண்டால்' என்பதன்பின் 'கண்டவர் ஆராய்வார்' என்பது விடப்பட்டது காண்க.

'அம்மா' என்ற அதிசயக்குறிப்புச்சொல், தாயோ தந்தையோ இருவரிலொருவர் கொடுத்தாலும் ஏற்றுக்கொண்டு ஆளுதற்குரிய பூமியை இருமுதுகுரவரும் இணைந்து கொடுத்திருந்தும் பரதன் விலக்கினமையும் உத்தமகுணத்தினனான இராமன் ஒருவன்போல ஆயிரருளரானாலும் அவரனைவரும் பரதனை ஒவ்வாமையும் ஆச்சரிய மென்பதை யுணர்த்திநின்றது.

இந்தப்பாட்டும் இதற்கடுத்ததும் அருமையினும் அருமையானவை. இவைகளின் அருமையின் அளவு, இவைகளிற் பரதனைப் புகழ்ந்த முறையினும் சிறந்தமுறையிற் புகழ்தல் இயலாதென்பதை உணர்வதன் அளவேயாம்.

(தொடரும்.)

வெ. ப சுப்பிரமண்ணியமுதலியார்.

## 1926ம்ஹு டிசம்பர்மீ 21உ (அக்ஷயஹு மார்கழிமீ 6உ)

## மாலை 6-15 மணிக்குக்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மகா-௱-௱-ஸ்ரீ K. ராமையங்காரவர்கள் B.A., B.L., அக்கிராசனம்வகித்தவர்.
2. ,, V. S. ராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் B.A., B.L.,
3. ,, ராவ்ஸாஹிப். M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் B.A., B.L.,
4. ,, T. C. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள் B.A., B.L., M.L.C., இவர்கள் வந்திருந்தார்கள்.

### தீர்மானங்கள்.

I. 1926-ம்-ஹு ஏப்ரல்மீ முதல் நவம்பர்மீ முடிய உள்ள சங்கம் வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய அடியிற் குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(1) மகா-௱-௱-ஸ்ரீ பெ. பெரி. சுப்பிரமணிய செட்டியார் அவர்கள், ஆவினிபட்டி, குருவிக்கொண்டான்பட்டிபோஸ்டு.

(2) Dr. S. K. சின்னையா, டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீஸர், வவுனியா, இலங்கை.

(3) ,, ஐ. ராஜு முதலியார் அவர்கள், தமிழ்ப்பண்டிதர், போர்டுஹைஸ்கூல், பூவிருந்தவல்லி.

(4) Rev. Father J. M. Gnanadikam, S. J. Post Box 56, மதுரை.

(5) ஸ்ரீமதி, பண்டிதை. N. பத்மாசனி அம்மாள், புலோலி, Point Pedro, இலங்கை,

III. 'செந்தமிழ்' உதவிப்பத்திராதிபர் T. K. இராமாநுஜையங்கார், லைப்ரேரியன் A. நாராயணையர் இவ்விருவர்களுக்கும் ரஜா சம்பளத்தோடு அனுமதிசெய்யலாயிற்று.

IV. 1926-27ம் வருஷத்திய சங்கம் வரவு செலவு மதிப்புத்திட்டம் அங்கீகரிக்கலாயிற்று.

V. மதுரையிலுள்ள M. R. C. C. Bankல் வட்டிக்குப் போடப்பட்டு முன்டெபாஸிட்டின் காலவரையறை கடந்ததாயுள்ள சங்கத்தின் Fixed Deposit தொகை ரூ. 25,000த்தையும் ஷை பாங்கியிலேயே மறுபடியும் வட்டிக்குப் போட்டுவைக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

VI. (1) வித்வான். ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் கேட்டுக்கொண்டபடி அவர்கள் பரிசோதித்து அச்சிட்ட சங்கப் பிரசுரம் ஒவ்வொன்றிலும் ஒருபிரதிகொடுக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

(2) தமிழ்யூனிவர்ஸிடி கமிட்டியாரின் Questionnaireல் கண்ட தகவல்களுக்கு மகா-௱-௱-ஸ்ரீ V. S. ராமஸ்வாமி சாஸ்திரியவர்கள், மகா-௱-௱-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதியவர்களோடு ஆலோசித்துப் பதில் அனுப்பவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

(3) சங்கப்பிரசுரமாகிய வைத்தியசாரசங்கிரகத்தை மறுபடியும் அச்சிடும்படி தீர்மானிக்கலாயிற்று.

மதுரை,
21—12—1926.

K. ராமையங்கார்,
அக்கிராசனம்வகித்தவர்.

# ஸ்வாமி சிரத்தானந்தர்மீது இரங்கற்பாக்கள்.

1. பல்வளமுஞ் செறிந்த எழிற் பாஞ்சாலம்
செய்த தவப் பயனு வந்து
மல்கு கலை அறிவு நடை மிக்கு வக்கீ
லாய்ச் செல்வ வளம்வாய்த் தென்றும்
ஒல்வகை பல் அறவினைகள் ஓவாதே
செல்வகைசெய் துலகு போற்ற,
இல்லற நன் நிலைக்கணிருந் துழி 'லாலா
மூன்ஷீராம்' எனும் பே ருற்றோய்!

[ஒல்வகை &c,-இது 'ஒல்லும்வகையால்' என்ற குறளின் கருத்து]

2. உரத்தானந் தமருயத் தன் உபதேசம்
பொருள் ஆவி உடலம் ஈந்து
சிரத்தானம் வகித்ததனுற் சிரத்தானந்
தம் கொண்ட சிரத்தா நந்த!
நரத்தானந் திடும் ஒருவன் நடலையினுற்
கதுமென ஓர் நஞ்சு தோய்ந்த
சரத்தானந் தொருகலைமான் சாய்ந்ததுபோற்
சாய்ந்தனையே தாணி மீதே!

[உரத்தால் நம் தமர் உய்ப - விவேகம், வலிமை, ஊக்கம் முதலிய வற்ருல் நம்மவர் உயிர்வாழ. சிரத்தானம் - தலைமைஸ்தானம் சிரத்தா னந்தம்-சிரத்தையும் ஆனந்தமும், நரத்தால் நந்திடும் - கேவலம் மனிதப் பிறவிக்குரிய குறைகளாற் சிறந்து வருந்தும் நடலை - வஞ்சம் கது மென - திடீரென—எவரும் எதிர்பாராதபடி. சரத்தால் நந்து ஒரு— பாணத்தால் அழிந்த ஒப்பற்ற.]

3. உத்தம! நின் சேதி மலை நாட்டுச் சே
திச்சேதி ஒருவா ரெக்கும்
புத்திவிசா லம் பெறு "மெய்ப் பொருள்நாய
ஞர்" எனவே புகழ்தக் காய் நீ

'முத்திநா தனை'ப் போன்று ஞற் கோழை
'அப்துல்ரஷீத்' மோச நெஞ்சன்
'தத்தன்' எனத் தத்தொழிக்க முயன்றுநின்று
ஞல் நினது தர்ம சிங்கே.

[நின்சேதி - உன்னைப்பற்றிய விஷயம். மலைநாட்டுச் சேதிச் சேதி- மலையமானாட்டின் தலைநகரான சேதிமாநகரில் நிகழ்ந்தசெய்தி ;. தத்து ஒழிக்க - துன்பத்தை நீக்க. சேதிநகரில் நிகழ்ந்த செய்திவிவரத்தைப் பெரியபுராணத்தில்,மெய்ப்பொருள்நாயனார்சரித்திரத்திற் கண்டுதெளிக.]

4. பல்லவர் நல் அமெரிக்கர் இந்துமதம்
தழுவ மனம் பதறி முன் ஓர்
புல்லியன் 'ஸான் பிரான்ஸிஸ்கோ' புனித இந்து
ஆலயத்தே புகுந்து யாரும்
சொல்லரிய நிஷ்டையிலார் 'ஸ்வாமி திரி·
குணதீதத்' தூயோன் மீது
வல்ல வெடி குண்டெறிந்து வதைத்ததுபோல்
நினை இவனும் வதைத்திட் டானே.

[ஸ்வாமிதிரிகுணதீதர் - ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஊழியசங்கத்தைச்சேர்ந்த பெரியாரில் ஒருவர். விவேகானந்தஸ்வாமிகளின் சகபாடி. அமெரிக்காவில் உள்ள பல கிறிஸ்தவ வெள்ளையர்களை இந்து மதத்தில் திருப்பி, அவர்களுடைய பெரும்பொருளைக்கொண்டே பஸிபிக் மகாசமுத்திரக்கரையில் 'ஸான் பிரான்ஸிஸ்கோ' என்ற இடத்தில், ஒரு பரிசுத்த இந்து ஆலயங்கட்டிய பரமதீரர். ஸான் பிரான்ஸிஸ்கோவில் உள்ள பிரசித்த கிறிஸ்தவாலயங்களும் கட்டிடங்களும் சமீபத்தில் தோன்றிய பூகம்பத்தால் அழிவுற்றகாலத்தில், தம்நிலையைப்பற்றி அஞ்சி வருந்தியோர்க்கு, "நமது ஆலயமும் நானும் சிஷ்யகோடிகளும் க்ஷேமமாயுள்ளோம்." என்று தந்தி அனுப்பியவர்: இவர்புகழ்கண்டு சகியாப் பித்தன் ஒருவன், இவரை மூர்க்க வஞ்சகத்துடன் வதைத்த வாலாறே இங்குக் குறிப்பிட்ட விஷயம். அவனை உடனே கொல்ல ஆயத்தமாயிருந்தோரைத் தடுத்து, ஸ்வாமிகள், அவன் பித்தனேயாதலின், அவனை ஏதும் செய்யாது விட்டுவிடுமாறு வேண்டியதையும், அவனை இரங்கி ஆசீர்வதித்தனுப்பியதையும்மட்டும் இப்பொழுது நினைப்பூட்டுகி

றோம். ஸ்வாமிசிரத்தானந்தரும், கோரகவியாக்கிரம்போல்வந்த அப்துல் ரஷீதை அவ்வாறே ஆசீர்வதித்திருக்கக்கூடுமென்பதே மகாத்மா காந்தி போன்ற அறிஞர்களின் துணிபு.]

5. ஆற்றல் அளித்திடு சத்யாக் கிரகஇயக்
கம் உச்சத் தார்ந்த அந்நாள்
நாற்றிசையும் எத்திசைகொள் நினை இஸ்லா
மியர் வலிந்து நன்கு போற்றி
மேற்படுதம் குருமாரே மேவவல்ல
மசூதி யுயர் மேடை மீது
வீற்றிருக்க நினைவிரும்பி நினதுதிரு
வாக்குநலம் மேற்கொண் டாரே.

[அந்நாள் - பல உயிர்வதைகள் பழிக்கஞ்சாப் பாவிகளால் நிகழ்ந்த 1919ஆ. மசூதி - டில்லியிலுள்ள 'ஜம்மா மஸ்ஜீத்' பள்ளிவாசல்.]

6. ஒன்றுமனத் தினராயன் றுனைமதித்த
அவர்களிலே ஒருவன் அந்தோ!
இன்றுனைக் கொன் றிட்டதெனே! அம்மத உத்
தமர்யாரும் இடியே றுண்டோர்
என்றெவரும் இசைப்ப மதி கலங்கித் தா
யினை இழந்த இளங்கன் றென்னக்
கன்றியழு தவன்செயலைக் கடிந்திகழின்
நின்றாய்மை கழறற் பாற்றே!

[ஒன்றும் மனத்தினராய் - அபிப்பிராயபேத மில்லாதவர்களாய்' அம்மத உத்தமர் - இஸ்லாமியசிரேஷ்டரான மௌலானு மகம்மதலி' ஷவுகட் அலி, ஜின்னுமுதலியோர். கன்றி - வருந்தி.]

7. சிதமிகுத்த நினைவதைத்த கதமிகுத்த
காதகனோர் தீமை சான்ற
மதமிகுத்த வெறிபிடித்த மதியிலியால்
மதவெறிதான் மன்னி யோனே
பதர்நிகர்த்த இவ்விழைத்த பழிநினைத்துப்
பிறமதத்தர் பண்பு போற்றும்
இதமிகுத்த வெழிற்றுணைத்த எமதிஸ்லாம்
சோதரரை இகழ்கி லேமால்.

[சிதம் - விவேகம்; கதம் - கோபம்; ஆல்-அசை. மதவெறி மன்னி யோன் - உடற்கொழுப்பும் வீண் பைத்தியமும் வாய்ந்தவன்: மத உணர்ச்சியோ, அதனாலுள்ள ஆவேசமோ மேலிட்டோன் அல்லன். மத உணர்ச்சி இம்மியுமிருப்பின், இஸ்லாமியமதம் இத்தகைய ஈனப்படு கொலைக் கிடந்தராதென்பதை உணர்ந்திருப்பான் என்பது உண்மை மகமதியர் துணிபு].

8. உள்ளத்தாற் பொய்யாதே ஒழுகிய நிற்
கிரங்கிலம் யாம் உலகத் துள்ளோர்
உள்ளத்துள் எல்லாம் நீ உளன்ஆனாய்
நீ மாணம் உற்றா னில்லை
கள்ளத்தால் நினைக்கொன்ற காதகனே
கற்பாந்த காலம் யாரும்
எள்ளத்தான் பழிபாவப் படுகுழியில்
வீழ்ந்தமைக்கே இரங்கி னோமே.

['உள்ளத்தாற்......உளன்' என்பது குறள்வாக்கின் அமைப்பு.]

9. எழுவரு டங்களின்முன், சத்யாக்ர
கத்திருநாள் இயன்ற காலைப்
பாழிய கூர்க் கப்படைஞர் ஜனத்திரளைச்
சுடவருங்காற் பயப்ப டாமல்
"வாழியநீர் எனைச்சுடுமின் முதலில்" என்று
மார்காட்டி வாய்மை கூறி
வேழமென நின்றவரைச் சொல்வலியாற்
செயலறச்செய் வீர தீர!

[இயன்றகாலை - 1919ஆம் மகாத்மா காந்தியால் விதிக்கப்பட்ட போது. பாழிய - வீரமும் பெருமைபு மிக்க. வாய்மை - இந்தியசகோ தரர்தன்மை, அவர்களிடமிருந்து எதிர்பார்க்கும் கடமை, பொருந்தாச் செய்கைகளின் புன்மை முதலியவற்றைப்பற்றிய உண்மை. உருக்குரு கக் கல்லுருகக் கன்னெஞ்சர் மனமுருக இவர்கூறிய மொழிகளையும் மூர்க்கமிக்குவந்த கூர்க்கப்படைஞர் நாணி இம்மியும் தீங்கிழையாது திரும்பிச்சென்ற அதிசயத்தையும் அக்காலப் பத்திரிகைகளிற் கண்டு கொள்க. வேழமென நின்றவரை - 'யானைபோல் மதர்த்துநின்று சுட

வந்த கூர்க்கரை' என்றும், 'வயோதிகத்தும் இறுமாந்து யானைக்கன்று போல் தாம் நின்று, அக்கூர்க்கரை' என்றும் பொருள்படும்.]

10. அருமைமிகு நின்பொருள்முற் றளித்துக் கங்
கைக்கரையில் அரித்துவா ரத்தில்
இருமையினும் நலம்புரியும் குருகுலமொன்
றினை நிறுவி இலங்கச் செய்தாய்
பெருமையுடன் இலங்குமதற் கைம்பதினு
யிரம்வெண்பொன் பெற்ற நின்றன்
உரிமைபெறு நூனிலய முவந்தளித்துப்
பலர்க்கு நலம் உறச்செய் தாயே.

[குருகுலம்:—இது ஆர்யசமாஜத்தை ஸ்தாபித்த ஸ்வாமி தயானந்த சரஸ்வதிகளின் விருப்பு நிறைவேற ஸ்தாபிக்கப்பட்டது. வெண்பொன் - ரூபாய். நூனிலயம் - புத்தகசாலை (Library) ].

11. செம்மைசெய் இக் குருகுல ஐ யையாண்டுத்
ஸவம் விரைவிற் சிறக்கச் செய்ய
அம்ம! நினைத் தா யதற்குள் இவ்வுலகை
விட்டகன்றாய் அந்தோ! அந்தோ!
எம்மனிதர் உளம்வருந்தார்? எவர்விழியே
நீர்வடியா திருக்கும்? கூறாய்
நம்மவர்சொல் 'குயவன் தடி கார'னுக்காம்
பழமொழிபோல் நடந்த தென்னே!

[ஐயையாண்டுத்ஸவம்-(Silver Jubilee என்ற) இருபத்தைந்தாம் வருஷத்திருநாள். விரைவில் - பிப்ரவரி மாதத்தில். குயவன் தடிகாரனுக்காம் பழமொழி - 'குயவனுக்குப் பலநாள்வேலை; தடிகாரனுக்குக் கால்நாழிகை வேலை" என்பது].

12. திக்கறு நம் இந்துமதம் தழைப இரு
தினசரிக் கா சிரிய னுயும்
தக்கநலம் பிறர்க்கியற்றச் சமயத்தொண்
டினைப்புரியச் சங்கா சத்திற்

புக்கும் உளம் பூரித்த நினைப்போன்றோ
புண்யரெவர் பூலோ கத்தே?
ஒக்க உயர் உருவமுடன் உயர்நடையும்
உயர்குணமும் ஒருங்குற் றோனே!

[இருதினசரிகள் - ஸ்வாமிகள் தம் வயோதிகத்தும் தாமே ஆசிரிய ராய் நின்று உருது இந்திபாஷைகளில் நடத்திவந்த 'தேஜஸ்' 'அர்ஜுனு' என்ற தினசரிப்பத்ரிகைகள். லிபரேட்டர் (Liberator) என்ற ஆங்கில வாரப்பத்திரிகையையும் தம் உயிர்பிரியும்வரை நடத்திபிருக்கிறார்கள்].

13. மணமலிந்த சிலமலர் வேர் மடிவுறினும்
மறைவுறினும் மணமே வீசும்
வணமலிந்த ரோஜா சண் பகம் வகுளம்
வேரி இவை வல்ல சான்றும்
குணமலிந்த நினதுடலம் குலைவுறினும்
குற்றமிலே கோதில் மக்கள்
கணமலிந்த எவ்வுலகும் நினது புகழ்ச்
செயலென்றும் கமழும் கண்டாய்!

[வணமலிந்த - அழகுமிக்க வேரி - வெட்டிவேர். வகுளம் - மகிழம்பூ. வல்லசான்று - பலத்த சாட்சி. கணம் - கூட்டம்].

14. 'அக்ஷயம்' என் பதில் அகரம், பண்டறிசுட்
டாய், 'க்ஷயமார் ஆண்' டென் றும் நின்
'வக்ஷ'மதை வஞ்சன் வெடி கழித்தமதி
'மார்கழி'ப்பேர் வாய்ந்த தென்றும்
பக்ஷமற 'வருத்திடு நா ளே குருநாள்'
என்றும், நீ பாரை நீத்த
'அக்ஷய ஆண்' டின்பொருள் 'மார் கழிமாதப்
பொருள், 'குருநாள்' அர்த்தம் ஓர்ந்தேம்.

[குரு - வருத்தம். குருநாள் - வருத்தம் விளைக்கும் தினம்].

15. நின்உயிர்போல் நீவளர்த்த குருகுலம் பத்
திரிகைகளும் நிலவி வாழி!
நன்னர் நிறு விய நினது கன்யாவித்
யாலயமும் நாளும் வாழி!

தந்நகரில் நின்தநபர் குலத்தவரா
திய ரென்றும் தழைத்து வாழி!
மின்னுபுக ழொடுநின் தா பனம்பிறவும்
மேதினிக்கண் விளங்கி வாழி!

[கன்யாமகாவித்யாலயம் - ஸ்வாமிகள் ஜலந்தரில் ஸ்தாபித்த பெண்கள் வித்யாலயம். தநயர்-புதல்வர். அவர் போதகாசிரியரான இந்திரனாதியோர். பிறதாபனங்களிற் சில- இந்திரப்பிரஸ்தத்திலும், கான்பூரிலுமுள்ள கல்விநிலயங்களும், வேறு வடஇந்தியக் கல்லூரிகளுமாம்].

பண்டித ம. கோபாலகிருஷ்ணையர்,
நச்சினார்க்கினியன் பத்திராதிபர், திருச்சி.

# சில ஆராய்ச்சி.

நச்சினார்க்கினியர் தொல்காப்பிய நூன்மரபு முதற்சூத்திரவுரையின்கண் திரிந்ததன்றிரிபு பிறிதென்பதற்கு உதாரணமாகக் காட்டிய "மகரவிறுதி," "னகரவிறுதி" என்னுஞ் சூத்திரங்களுள், 'னகரவிறுதி' என்பது பொருத்தமில்லாததாகக் காணப்படுகின்றது.

திரிந்ததன்றிரிபு பிறிதென்றலாவது :—ஓரீறு இன்னோரீறாக (பிறிதீறாக)த் திரிந்து நின்று புணர்ச்சிபெறுமென்றல். இதனை நன்னூலார் விதியீறென்பர். இதற்கு நச்சினார்க்கினியர்காட்டிய உதாரணச் சூத்திரங்களுள் 'மகரவிறுதி' என்னுஞ் சூத்திரம் பொருந்துகின்றது; எங்ஙனமெனில், 'மகரவீறுகெட்டு அகரவீறாகிய பிறிதீறாய்நின்று புணர்ச்சிபெறுதலின். 'னகரவிறுதி'யென்பது பொருத்தமில்லை; னகரம் றகரமாய்த்திரிவதன்றிப் பிறிதீறாய்நின்று புணர்ச்சிபெறுமையானும் றகரம் ஈற்றெழுத்தன்மையானும் என்பது.

இனி, னகரவீற்றில்வரும் எகினக்கால்முதலியன பிறிதீறாய்நிற்றலின் 'னகரவிறுதி' என்றாரென்றலும் பொருந்தாது; என்னையெனில், 'திரிந்ததன்றிரிபு அது' என்றன் முதலியவற்றிற்கும் அவ்வவ்விலக்கணமமைந்தசூத்திரங்களையே எடுத்துக்காட்டினாராதலின். எங்ஙன

மெனில், 'அது' என்றற்குக்காட்டிய சூத்திரம் 'தகரம்வரும்வழி'என்பது. அது, லகரவீறு, "அல்வழியெல்லாமுறழெனமொழப" என்னுஞ் சூத்திரத்தால், தகரம்வரும்வழி றகரமாய்த்திரிவதன்றி, ஆய்தமாகவும் திரியுமென விதித்தலின்,முன் றகரமாய்த்திரிந்த லகரவீறாகிய அதுவே, ஆய்தமாகவுந் திரியுமெனத் 'திரிந்ததன்றிரிபு அது' என்பதற்கு உதாரணமாயிற்று. இங்ஙனமே, "நீயெனொருபெயருருபியனிலையும்", 'ஆறென்கிளவி' என்னுஞ் சூத்திரங்களும் வருதலின், பிறுண்டும் என்றுங் கூறினர். ஆதலின் பிறிது என்புழி ஈண்டும் அவ்வாறே அதற்குரியசூத்திரத்தையே காட்டி விளக்கியிருப்பாரன்றி வேறுகூறாராதலின் என்பது. ஆதலின் அது, "நகரவிறுதியும்" என இருத்தல்வேண்டுமென்பது எமது கருத்து. அவ்விறுதியே, 'பொருந'எனப் பிறிதீறாய் நின்றுபுணர்தலின்.

இன்னும், தொகைமரபின்கண்,

"அவற்றுள்,
மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி யிறுதி யான."

என்னுஞ் சூத்திரவுரையின்கண், நச்சினார்க்கினியர், "வருமொழியை முற்கூறியவதனால் ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழிகளுள்ளும் சில உறழ்ச்சிமுடிபுபெறுதல் கொள்க" எனக் கூறி, பூஞெரி, பூஞ்ஞெரி, காய்ஞெரி காய்ஞ்ஞெரி என உதாரணங்காட்டினர். இவரே முன் ஓரெழுத்தொருமொழி என்னுஞ் சூத்திரவுரையின்கண் ஒற்றடுத்து வரும் 'காய்'முதலியபோன்ற மொழிகளை, ஈரெழுத்தொருமொழி எனக் கூறின் செய்யுளியலோடு மாறுகொளக்கூறல் என்னும் குற்றந்தங்குமென மறுக்கின்றார். ஆதலின் நச்சினார்க்கினியருரையின்கண் வேறுரையைப்பெய்து பிரதி எழுதுவோர் எழுதினாரோ என ஐயமாகின்றது.

இவ்விரண்டையும் ஆராய்ந்து உண்மையுரைத்தல் அறிஞர்கடன்.

இங்ஙனம்,

சி. கணேசையர்.